
# யா/மண்கும்பான்

## அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

# பரிமளம்


## 2001

# பாடசாலையின் அமைவிடம்



## யா/மங்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

### கிடைப்படம் (1mm = 1 Feet)




01. 30' 60' கட்டிடம்
02. 30' 21' கட்டிடம்
03. 30' 40' கட்டிடம் (தரை மட்டம்)
04. 20' 15' அதிபர் விடுதி (சேதமடைந்த நிலை)
05. கிணறு (பயன்படுத்தல்)
06. சலகூடம்
07. மலகூடம்
08. கிணறு (திருத்தம்செய்யப் படல் வேண்டும்)
09. மலகூடம் (பாவிக்கமுடியாது)
10. மலகூடம் (பாவிக்கமுடியாது)

## யா/மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

## பாடசாலையின் வரலாறு

கிறிஸ்தவ மிஷனரிமார்களின் கைகளில் கல்வி இருந்த காலம். இங்கும் கிறிஸ்தவ மிஷனரியால் ஒரு மத சார்புடைய கிறிஸ்தவப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இந்து மதத்தைச்சார்ந்தவர்களாக இருந்த இந்தக் கிராமத்தில் கிறிஸ்தவப் பாடசாலை அமைந்ததும், மத, மாற்றம் செய்யப்படுவதும் இந்து மதத்தவர்களின் மனத்தைப் பெரிதும் புண்படுத்தியது. இந் நிலையில் மண்கும்பான் கிராமத்தில் வசித்த திரு.ஆறுமுகம் சோமசுந்தரம் என்பவரால் தனது சொந்தக் காணியினை 1946ம் ஆண்டில் நன்கொடையாக பாடசாலையை அமைப்பதற்கு வழங்கியதன் மூலம் இந்து போட் இராசரத்தினம் அவர்களினால் தற்போது பாடசாலை அமைந்துள்ள வளவில் இப்பாடசாலை 1946ம் ஆண்டில் ஆரம்பமாகியது. இப்பாடசாலை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட பொழுது பாடசாலைக்கு வடக்குப் புறமாக இருக்கும் சுமார் ஒரு ஏக்கர் காணி அரசினால் சுவீகரிக்கப்பட்டது. இக்காணி சொரியலாக 5,6 பங்காளர்களுக்கு உரியதாக இருந்தது. அவர்கள் தங்களுக்கிடையில் ஒற்றுமையாக வரமுடியாததன் காரணமாக அதற்குரிய நஷ்ட ஈட்டினைப் பெற முடியாது இருந்தது.

1946இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அரசினால் சுவீகரிக்கப்பட்ட பின் மண்கும்பான் அ.த.க.பாடசாலை எனும் பெயரில் மண்கும்பான் கிழக்கில் இயங்கி வருகின்றது. சுமார் 5 கிலோ மீற்றர் தூரமுடைய அல்லைப்பிட்டிக்கும் சுமார் 5 கிலோ மீற்றர் தூரமுடைய வேலணைக்கும் இடையில் இயங்கி வருகின்றது. ஆரம்பத்தில் இப்பாடசாலை தரம் 1, தரம் 5 வரை இயங்கியது. பின்னர் 19~~47~~77 இல் திரு.இராமலிங்கம் அதிபராக இருந்த காலத்தில் தரம் 1 - தரம் 8 வரை வகுப்புக்கள் நடாத்த கல்விப்பணிப்பாளரினால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அதிபர் திரு.இராமலிங்கத்திற்குப் பின்னர் திரு.கனகரட்ணம், திரு.நல்லையா ஆகியோர் அதிபர்களாக இருந்தார்கள். 1985 இல் இப்பாடசாலைக்கு திரு.கு.சரவணபவானந்தன் அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் அதிபராகக் கடமையேற்ற போது ஒரு முழு நேர ஆசியராக திரு.ந.உருத்திரலிங்கம் அவர்களும் பகுதிநேர ஆசிரியராக எம்.எஸ்.அமானுல்லா அவர்களும் கடமையாற்றினார்கள். புதிய அதிபர் கடமையேற்றவுடன் திரு.ந.உருத்திரலிங்கம் அவர்கள் வெளிநாடு சென்று விட்டார். அதிபர் ஒருவருடனேயே இப் பாடசாலை நடாத்தப்பட்டது. வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகம் 1988 இல் ஆரம்பிக்கப்பட்டபோது இப்பாடசாலையின் வளர்ச்சி திடீரென வியக்கத்தக்க வகையில் வளர்ச்சி கண்டது. 1988 இல் ஆசிரியர் நியமனத்தின் போது 12 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இப்பாடசாலையின் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களும் இப்பாடசாலை நியமனங்களில் அடங்கும்.

மாணவர் தொகையும் 312 ஆக இருந்தது. மண்டைதீவுக் கொத்தணி பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவின் முன்னோடிப் பாடசாலைகளாகவும் இப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டது. முன் எப்போதும் நடைபெற்றிராத விளையாட்டுப் போட்டிகளும் கலை விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. மக்களின் பேராதரவு இப்பாடசாலைக்கு முழுமையாகக் கிடைத்தது. கொத்தணி கோட்ட மட்ட போட்டிகளும் மாணவர்கள் உடற்பயிற்சி, தமிழ் திறன் போட்டிகள் ஆகியவற்றில் பல வியத்தகு சாதனைகளை நிலை நாட்டின.

பாடசாலைக்கான ரூபா 25000 பெறுமதியான தளபாடங்கள் 1990 இல் மண்கும்பான் கிராமமுன்னேற்றச் சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இப்பாடசாலைக்கான மின்சாரம் ரூபா 15000 செலவில் திரு.சதாசிவம் அவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதனை அப்போது இருந்த கோட்டக்கல்வி அதிகாரி திரு.சி.பூலேந்திரன், திரு.சு.சண்முகநாதன், எம்.ஏ.எம்.எம்.றகீம் அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

இப்பாடசாலையிலிருந்து முதன் முதலாக 1989 இல் செல்வி.கா.நந்தகுமாரி 186 புள்ளிகள் பெற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார். தரம் 8 வரையிலிருந்த பாடசாலையில் க.பொ.த.சாதாரண தரம் நடத்துவதற்கான இணைப்பு சீ படிவத்தினை கல்வி அதிகாரி திரு.மன்சூர் அவர்களின் பணிப்பின் பேரில் அப்போதைய வட்டாரக் கல்வி அதிகாரி திரு.வ.ஆறுமுகம் அவர்களினால் பாடசாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டது. பதிவுகள் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டன.

18.10.1991 இல் இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பாடசாலை இடம்பெயர்ந்த திருநெல்வேலியில் கீழ் தனியார் கல்வி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. இடம்பெயர்ந்த நிலையிலும் இப் பாடசாலையிலிருந்து இரு மாணவிகள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமை இப்பாடசாலையின் செயற்பாட்டிற்கு சிறந்த உதாரணமாகும். பின்னர் இப்பாடசாலை யா/ஆணைப்பந்தி குருக்கள் சுவாமி வித்தியாலயத்தில் இயங்கியது. 1995.01.22 இல் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திரு.கு.சரவணபவானந்தன் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

அதன் பின்னர் 23.01.1995 திகதி தொடக்கம் திரு.சண்முகநாதன் அவர்கள் அதிபராகக் கடமை ஏற்றார். இவரது காலப் பகுதியில் பாடசாலையை நடத்துவதற்கான மாணவர்கள் குறைவாக இருந்த காரணத்தினால் 31.08.1995ல் இப்பாடசாலை மூடப்பட்டது. நாட்டின் சூழ்நிலை காரணமாக அதிபரும் கனடாவுக்கு சென்று விட்டார்.

பத்து வருடங்களின் பின் 17.01.2000ம் ஆண்டில் திரு. கணேசபிள்ளை குமரேஸ்வரநாதன் அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பாடசாலையின் கட்டிடங்கள், கூரைகள் சேதமடைந்திருந்தமையால் பாடசாலையை மங்கும்பான் மேற்கில் அமைந்துள்ள திரு.செல்லையா சிவலிங்கம் அவர்களின் இல்லத்தை மங்கும்பான் பிரதேசத்து கிராம சேவையாளர் திரு.இரா.யோகேஸ்வரன், பெற்றோர்கள், திரு.சொக்கலிங்கம் சுவாமிநாதன், நலன்விரும்பிகள் கல்வித் திணைக்களத்தின் அனுமதியோடு தெரிவு செய்யப்பட்டது. 2001.01.07 வெள்ளிக்கிழமை தைப்பூசத் திருநன்று பாடசாலை மீளவும் திறக்கப்பட்டது. இவ்விழாவில் திரு.செ.இரத்தினம் (உதவி அரசாங்க அதிபர் வேலணை) திரு.வ.இராதகிருஷ்ணன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் தீவகம்) திரு. சோ.தில்லைநாதன் (கோட்டக்கல்வி அதிகாரி வேலணை) திரு.ந. கருணாகரகுருமூர்த்தி (வேலணை பிரதேசசபைத் தலைவர்) திரு. கு.சரவணபவானந்தன் (யா/வேலணை தெற்கு நடராசா வித்தியாசாலை அதிபர்) ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். பின்னர் யூ.என்.எச்.சீ.ஆர் நன்கருத்திட்டத்தின் கீழ் ரூபா 499650 செலவில் 30' 60' அளவுடைய கட்டிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு 2001.02.07 புதன் கிழமை தைப்பூசத்திருநன்று தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ப.விக்கினேஸ்வரன் அவர்களால் கட்டடத் திறப்பு விழா செய்யப்பட்டு பாடசாலை பழைய இடத்தில் மீள இயங்கத் தொடங்கியது.

*---------*

## பாடசாலை இலட்சனை

**விளக்கம்**

01. எந்த இடமும் எமக்குச் சொந்தம் என்ற வகையில் எல்லாப் பாடசாலைகளிலும் அதிபர், ஆசிரியர்கள் தமது கடமையைச் செய்ய வேண்டும் என்பது இங்கு தெளிவுபடக் காட்டப்படுகின்றது.

02. கல்வியானது விளக்குப் போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டும் அதற்கு பாடசாலை மிகவும் முன் மாதிரியாகும்.

03. வாழை பெருகுவதுபோன்று மாணவர்களின் கல்வியும் பெருகியுடன் வளம்பெற்ற நாட்டிற்கு பூரண அறிவுடைய மனிதனை உருவாக்க வேண்டும். வாழையடி வாழையாக மாணவ சமுதாயம் நாட்டிற்கு நல்ல செயற்பாட்டினை செய்ய வேண்டும்.

04. கலப்பையினால் நிலத்தை உழுது பண்படுத்துவது போன்று மாணவர்களின் கல்வியினையும் பயன்படுத்தி எதிர்கால சமுதாயத்திற்கு ஆவன செய்யுமாறு மாணவர்களைத் தூண்டல் வேண்டும்.

# பாடசாலைக் கொடி




பாடசாலைக் கொடி நீலநிறம், இதன் நோக்கம் நீலநிறம் கண்ணுக்கு குளிர்ச்சி தருவது போன்று இப்பாடசாலையும் சகல துறைகளிலும் குளிர்ச்சி பெற வேண்டும்.



## யா/மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக் கீதம்

அறிவொளி பெருகிடும்
அரும்பெரும் கூடம்
அனைவரும் பயில் பணிபீடம்
அலைபுனல் தழுவிடும்
மணல் மிகு தீவில்
சுடர்விடும் கலைபயில் கூடம்

இந்து கிறிஸ்தவ முஸ்லிம் சோதரர்
இணைந்தே பயின்றிடும் கூடம்
வந்து பலகலை வளமுடன் கற்றிட
வளமுடன் வாழிய என்றும்
இன்தமிழ் இலக்கியம் இனிய நற் கலைகள்
இதமுடன் உளமதிலிருத்தி

அன்புறு சமயமும் ஆங்கில மொழியுடன்
அரிய நற்கணிதமும் பெறுவோம்
சீரிய ஒழுக்கமும் சிறந்த நற்பழக்கமும்
சிறப்புடன் விளங்கிட முனைவோம்
நேரிய வழியினில் நிறைந்திடு வளம் பெற
நின்மலர் தாளினைப் பெறுவோம்.

மண்கும்பான் அரசினர் தமிழ் வித்தியாலய மாதா
மலர்ந்திடும் மனம் வீசி
பொங்கிடும் அறிவொளி பொலிவுடன் விளங்க
போற்றுவோம் தாயென நினைத்து
போற்றுவோம் தாயென நினைத்து
போற்றுவோம் தாயென நினைத்து

# கடமையாற்றிய அதிபர்கள் விபரம்

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் பின் வருவோர் இப்பாடசாலையில் ஆவணங்கள் மற்றும் தகவல்கள் அடிப்படையில் அதிபர்களாக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1. திரு. மாணிக்கலிங்கம்
2. திரு. கைலாயபிள்ளை – 1971 – 1973 வரை
3. திரு. சதாசிவம்
4. திரு. கனகரெத்தினம்,
5. திரு. இராமலிங்கம்
6. திரு. நல்லையா
7. திரு. கு. சரவணபவானந்தன்
8. திரு. ஐ. சண்முகநாதன்

## ஆசிரியர் விபரம்
***********

01. செல்வி வசந்தி (ஆரம்பக் கல்வி)

02. செல்வி திருமதி (ஆரம்பக்கல்வி)

03. திருமதி. ப. சியாமா (ஆரம்பக்கல்வி)

04. திருமதி. இ. செல்வராணி - விஞ்ஞானம்

05. திரு. கணேஸ்வரன் - சமயம்

06. செல்வி. பு. நடராசா - ஆரம்பக்கல்வி

07. செல்வி. வ. ஐயாத்துரை - ஆரம்பக்கல்வி

08. திரு. பற்றிக் - ஆங்கிலம்

09. செல்வி. சா. சந்தையா - ஆரம்பக் கல்வி 31.08.1995 வரை

10. திருமதி. க. தனக்குமார் - ஆரம்பக் கல்வி 31.08.1995 வரை

11. திருமதி காசிநாதன் - ஆரம்பக் கல்வி 31.08.1995 வரை

12. திருமதி வ. ஒலிவல்லன் - ஆரம்பக் கல்வி 31.08.1995 வரை

13. திரு ந. உருத்திரலிங்கம் - ஆரம்பக் கல்வி.

## ஆசிரியர் விபரம் 2000

2000.01.17 இல் அதிபரைத் தவிர நிரந்தர ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படாத காரணத்தினால் தொண்டர் ஆசிரியர்களை நியமித்துள்ளோம்.

### தொண்டர் ஆசிரியர்கள் விபரம்

| | பெயர்கள் | பிறந்த திகதி | கல்வித் தகைமை | முகவரி |
|---|---|---|---|---|
| 1. | செல்வி பு. நிரஞ்சனா | 12.12.1978 | க.பொ.த. உ/த | கோப்பாய் தெற்கு கோப்பாய் |
| 2. | செல்வி. பா. விநோதினி | 07.05.1977 | க.பொ.த. உ/த | 333/ அடியபாதம் வீதி கல்வியங்காடு |
| 3. | திரு. ச. சதானந்தசிவம் | 02.03.1979 | க.பொ.த. உ/த | 4ம் வட்டாரம், மண்கும்பா[illegible] |

2000.2.15ம் திகதி தொடக்கம் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக திரு. ப. சதீஸ்குமார் தீவ லயத்தினால் நியமிக்கப்பட்டார்.

### ஆசிரியர் விபரம் 2001

1. திரு. க. குமரேஸ்வரநாதன் அதிபர் (விசேட பயிற்சி-விவசாயம்) இ.அ.சே 2.1
2. திரு. ச. சதானந்தசிவம் - தொண்டர் ஆசிரியர் (க.பொ.த உ/த)
3. திரு. சு. பன்னீர்ச்செல்வன் - ஆசிரியர் - தமிழ்மொழி மூலம் தகுதிகாண் ஆசிரியர் இந்து சமயம்

## மாணவர் விபரம் 2000

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | - | 4 | 04 |
| 2 | 3 | 5 | 08 |
| 3 | 2 | 2 | 04 |
| 4 | 6 | 6 | 12 |
| 5 | 6 | 2 | 08 |
| மொத்தம் | 17 | 19 | 36 |

## மாணவர் விபரம் 2001

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | - | 1 | 01 |
| 2 | - | 4 | 04 |
| 3 | 1 | 3 | 04 |
| 4 | 2 | 1 | 03 |
| 5 | 2 | 2 | 04 |
| மொத்தம் | 5 | 11 | 16 |

## பௌதீக வளம்

2000.04.24 இல் வலயக் கல்வித் திணைக்களத்தால் பின்வரும் தளபாடங்கள் வழங்கப்பட்டது.

1. மாணவர் கதிரை - 15
2. கரும்பலகை தாங்கியுடன் - 02

மாணவர் விபரம் - 2002

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | — | 4 | 04 |
| 2 | 3 | 4 | 07 |
| 3 | 1 | 4 | 05 |
| 4 | 5 | 6 | 11 |
| 5 | 4 | 2 | 06 |
| மொத்தம். | 13 | 20 | 33 |

மாணவர் விபரம் - 2003

| தரம் | ஆண் | பெண் | மொத். |
|---|---|---|---|
| 1 | 5 | 4 | 09 |
| 2 | 2 | 4 | 06 |
| 3 | 4 | 4 | 08 |
| 4 | 1 | 5 | 06 |
| 5 | 5 | 7 | 12 |
| மொத்தம். | 17 | 24 | 41 |

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

2000.02.06இல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. க. குமரேஸ்வரநாதன் |
| செயலாளர் | - | திரு. இரா. யோகேஸ்வரன் |
| பொருளாளர் | - | திரு. இ. விஸ்வராசா |
| உறுப்பினர்கள் | - | திரு. பொ. சிவரத்தினம் |
| | | திரு. ப. வசந்தகுமார் |
| | | திருமதி. சு. யமுனாராணி |
| | | திருமதி. ய. இரவீந்திரன் |
| | | செல்வி. பா. வினோதினி |
| | | திரு. ச. சதானந்த சிவம் |

## பாடசாலையின் புனரமைப்பு

1. UNHCR - நன்கருத்திட்டம் மூலம் ரூபா 499650 செலவில் 30'x60' அளவுடைய கட்டிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பயனாளிகளின் பங்களிப்பு மூலம் ரூபா 69500 செலவில் பாடசாலையின் எல்லைப்புறங்கள் வேலிகள், பாடசாலை வளவு சுத்தம் செய்யப் பட்டுள்ளது.

மேற்படி கட்டிட வேலையால் கிடைத்த இலாபத்தில் ரூபா 25000க்கு பாடசாலைக்கு தளபாட வசதிகளும், மற்றும் 10' x 10' அளவுடைய அலுவலக அறை என்பவற்றை அமைத்துள்ளது.

2. D.C.P பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ரூபா 200000 நிதி கிடைத்துள்ளது.

30' x 21' அளவுடைய கட்டிட வேலையை வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் புனரமைப்பு செய்யத் தொடங்கியுள்ளது.

# பாடசாலைத் தேவைகள்

01\. 1. தரம் -1, தரம் 2க்கான செயற்பாட்டு அறைகள்
2\. அதிபர் அலுவலகம் (பூரண வசதிகள் கொண்டு)
3\. ஆசிரியர் தங்கும் அறை (பூரண வசதியுடன்)

02\. நூலக வசதி

03\. விளையாட்டு மைதானம்

04\. விளையாட்டு முற்றம்

05\. குடிநீர் வசதி (பைப் வசதிகள்)

06\. மின்சாரம்

07\. வானொலி

08\. 1. கலன்கள்
2\. தொலைக்காட்சிப் பெட்டி (1)

09\. ஆரம்பக்கல்விக்கான கற்பித்தல் உபகரணங்கள்

10\. தளபாட வசதி

10\. 1. உருக்கு அலுமாரி - 02
2\. மாணவர் மேசை - 25
3\. மாணவர் கதிரை - 10
3\. பாலர் மேசை - 10
பாலர் கதிரை - 20
4\. ஆசிரியர் மேசை - 03
ஆசிரியர் கதிரை - 03
5\. அலுவலக கதிரை - 02

11\. தட்டச்சுப்பொறி (தமிழ்) - 01
தட்டச்சுப்பொறி (ஆங்கிலம்) 01

12\. சுத்திகரிப்பு தொழிலாளி - 01

13\. காரியாலய ஊழியர் - 01

14\. காவலாளி - 01

# பாடசாலை பற்றிய தகவல்கள்

1. பாடசாலை இலக்கம் - 09052
2. பாடசாலைப் பரீட்சை இலக்கம் - 11196
3. பாடசாலை குறியீட்டு இலக்கம் - 1014030
4. பாடசாலை கிராம சேவகர் பிரிவு - ஜே/11
5. உதவி அரசாங்க அதிபர் பிரிவு - தீவுப் பகுதி தெற்கு
6. பாடசாலை சம்பள கணக்கு இலக்கம் - ஜீ.2992

   இலங்கை வங்கி, ஊர்காவற்துறை
7. பா.அ.ச.கணக்கு இலக்கம் - சீ 2993

   இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை
8. பாடசாலை தர உள்ளீட்டுக்கான கணக்கு இலக்கம் - ஜீ 2996

   இலங்கை வங்கி ஊர்காவற்றுறை.